# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **516/2016**

ஆணை எண். **21/2017**

நாள் : **16/02/2017**

03.06.2016 நாளிட்ட தினமலர்
நாளிதழ் செய்தி

தாமாக முறையீட்டு மனுவாகப்
பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
கோடம்பாக்கம் மண்டலம்,
சென்னை மாநகராட்சி.
சென்னை – 24.

– எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், 141–வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு ஆறுமுகம், மாநகராட்சி துப்புரவுப்பணியாளர்களை தரக்குறைவாக பேசியதைக் கண்டித்து, கண்டன சுவர் பதாகைகள் ஒட்டப்பட்டன எனக் குறிப்பிட்டு 03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தியினை முறையீட்டு மனுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 516/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டல அலுவரின் அறிக்கை பெற்று கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் "அடிக்கடி நடக்குது அடிதடி" என்ற குறுந்தலைப்பின் கீழ், கடந்த சில வாரங்களுக்கு முன் 141–வது வார்டு கவுன்சிலர் திரு ஆறுமுகம், மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்களை தரக்குறைவாக பேசியதாக அவரைக் கண்டித்து, கண்டன போஸ்டர்கள் ஒட்டப்பட்டன என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து வழக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு கோடம்பாக்கம் மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு ஆர். சி. ஆறுமுகம் அவர்கள் தனது வார்டில் துப்புரவு ஆய்வாளர் திரு எஸ். மணிவேலு அவர்களை அன்றாட பணிகளை நல்லமுறையில் பணியாற்றுமாறு கூறியதற்கு, தான் நல்லமுறையில்தான் பணியாற்றுகிறேன் என்று பதில் கூறியதால் தன்னை எதிர்த்து பேசுகிறாயா என்று மாமன்ற உறுப்பினர், துப்புரவு ஆய்வாளரை நேரடியாகவும் மற்றும் மறைமுகவாகவும் திட்டியுள்ளார் என்றும் இதற்கு கண்டனம் தெரிவித்து தொழிற்சங்கம் மூலமாக சுவர் பதாகைகள் ஒட்டப்பட்டன என்று மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், நாளிதழ் செய்தி மூலம் மேற்குறிப்பிட்ட செய்தியினை கண்டறிந்த மாண்புமிகு முன்னாள் சென்னை

மாநகராட்சி மேயர் அவர்களும் வார்டு உறுப்பினரின் செயலைக் கண்டித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார். மன்ற உறுப்பினரும், தனிப்பட்ட முறையில் துப்புரவு ஆய்வாளர் மீது எந்தக் கோபமும் இல்லை என்றும் பணியின் மீதுள்ள அக்கறை காரணமாகவே திட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

2. துப்புரவுப் பணியினை மேற்கொள்ளும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்கள் பொதுமக்களுக்கு இன்றியமையாத பணியினை ஆற்றி வருகின்றனர். ஓரிரு நாட்கள் அவர்களது பணி தடைப்பட்டாலும், மாநகராட்சி சுகாதார சீர்கேட்டிற்கு உள்ளாக நேரிடும். துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களை கண்ணியத்துடன் நடத்துவதே ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் கடைநிலைப் பணியாளர்களுக்கு அவர்கள் பணிகளை தடையின்றி செய்வதற்கு மிகவும் ஆதரவாக செயல்பட வேண்டுமேயொழிய, அவர்கள் மேற்கொண்டுள்ள பணியினைக் கருத்தில் கொண்டு அவர்களை ஏளனமாகப் பேசுவதும், திட்டுவதும், தவிர்க்கப்படவேண்டும். மாமன்ற உறுப்பினர்கள் பணிகளைச் செய்வதற்கு தங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற கருத்து துப்புரவுப் பணியாளர்களிடம் ஏற்பட்டால் அவர்களது பணி சீரும் சிறப்பாக அமையும். இந்நேர்வு சம்பந்தப்பட்ட முன்னாள் 141–வது வார்டு மாமன்ற உறுப்பினர் தற்பொழுது பொறுப்பில் இல்லை. எனினும், பொதுசேவையில் ஈடுபட்டுள்ள முன்னாள் மாமன்ற உறுப்பினர் இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகாமல் தனது பணியினை எதிர்காலத்தில் சிறப்பாக ஆற்றுவார் என்று கருதியும் ஆற்றவேண்டும் என வற்புறுத்தியும், அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 16– ஆம் நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

8/3/2017

செயலாளர்.

7.3.17

7/3/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
கோடம்பாக்கம் மண்டலம்,(மண்டலம்–10)
சென்னை மாநகராட்சி,
எண்.64, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 24.